# மீனவர்கள் இன்னல் தீர்க்க கச்சத்தீவு மீட்பே ஒரே வழி: முதல்வர் ஸ்டாலின் பேச்சு

**சென்னை, மே 28–**

**தமிழக மீனவர்களின் இன்னல்கள் தீர்க்க கச்சத்தீவை மீட்பது தான் ஒரே வழி என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.**

**மீனவர்கள் நலனுக்காக தமிழ்நாடு அளவுக்கு எந்த மாநில அரசும் செய்யவில்லை என்றும் அவர் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று சென்னை, திருவொற்றியூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருவொற்றியூர் சூரை மீன்பிடி துறைமுகம் உள்ளிட்ட முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசியதாவது:– மீனவர்களின் நலனைக் காப்பதோடு, நம்முடைய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதனால்தான், கடந்த ஏப்ரல் 2–ம் நாள் சட்டமன்றத்தில், கச்சத்தீவை மீட்க வேண்டும் என்று தனித் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். கச்சத்தீவை மீட்பதுதான் தமிழ்நாட்டு மீனவர்களின் இன்னல்களுக்கு அது நிரந்தர தீர்வாக அமையும்.

### பிரதமருக்கு 76 கடிதம்

கடந்த நான்காண்டுகளில், 97 நிகழ்வுகளில், 185 படகுகளும், ஆயிரத்து 383 மீனவர்களும், இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு இருக்கிறார்கள். சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க வேண்டும்; படகுகளை மீட்க வேண்டும் என்று பிரதமருக்கும், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கும், இதுவரைக்கும் 76 கடிதங்களை நான் எழுதியிருக்கிறேன். அதுமட்டுமல்ல, நேரில் சந்திக்கும் போதெல்லாம் தொடர்ந்து நான் வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன். அதேபோல, தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களும், கூட்டணி எம்.பி.,களும் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி உரிமைக்குரலை எழுப்பிய காரணத்தால்தான், இதுவரைக்கும் ஆயிரத்து 354 மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். எஞ்சிய 29 மீனவர்களையும் மீட்டு, தாயகம் அழைத்துகொண்டு வருவதற்கான தொடர் நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நிலையிலும், 2018–ம் ஆண்டு முதல் சிறைபிடித்த 229 படகுகளை இலங்கை அரசு இதுவரைக்கும் விடுவிக்கவில்லை. ஒருபக்கம் அவற்றை மீட்பதற்கான அரசியல் போராட்டத்தை நாம் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தாலும், இதனால், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக் கூடாது என்று மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களை சேர்ந்த 129 விசைப்படகு உரிமையாளர்களுக்கு தலா 5 லட்சம் ரூபாய் வீதமும், 26 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் வீதமும் என்று 6 கோடியே 84 லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறோம். இந்தத் தொகையை 6 லட்சம் ரூபாயாக முதலில் உயர்த்தி, இப்போது 8 லட்சம் ரூபாயாக உயர்த்தி அறிவித்திருக்கிறேன்.

### கண்ணீர் துடைக்கும் அரசு

இப்படி, மீனவர்களின் கண்ணீரைத் துடைக்கும் அரசாக ஆதரவுக்கரம் நீட்டக்கூடிய அரசாக திராவிட மாடல் அரசு இருந்து கொண்டிருக்கிறது. இந்த இன்னல்கள் எல்லாம் தீர கச்சத்தீவை மீட்பதுதான் ஒரே வழி.

★ தமிழ்நாடு மீனவர் நலவாரியம் வாயிலாக, 19 ஆயிரத்து 997 பயனாளிகளுக்கு, பல்வேறு நிவாரணம் மற்றும் உதவித் தொகை திட்டங்களின்கீழ் 25 கோடியே 68 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

★ கடந்த 4 ஆண்டுகளில் 121 மீன்வள உட்கட்டமைப்பு அந்த பணிகளுக்காக மொத்தம் 1,849 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

★ 46 புதிய மீன் இறங்குதளங்கள் அமைக்க 626 கோடியே 12 லட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 34 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது. 29 மீன் இறங்குதள மேம்பாட்டு பணிகளுக்காக 85 கோடியே 52 லட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 17 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது. ★ மீனவர்களுக்காக கட்டப்பட்ட 8 ஆயிரத்து 561 வீடுகளுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. 1 லட்சத்து 20 ஆயிரம் மீனவர்கள் மற்றும் மீனவ மகளிர் தொழில் புரிய உழவர் கடன் அட்டை, கூட்டுறவுக் கடன், மகளிர் திட்டம், சுயஉதவிக் குழு கடன் ஆகியவற்றின் கீழ் 1,528 கோடி ரூபாய் அளவுக்கு கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

★ கடலில் மீன் பிடிக்கும்போது காணாமல் போகும் மீனவர்கள் மற்றும் கடலில் மீன்பிடிக்கும் போது அண்டை நாட்டு அரசால் கைதுசெய்யப்படும் மீனவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் தின உதவித் தொகை 250 ரூபாயிலிருந்து 350 ரூபாயாக உயர்த்தினோம். பிறகு, 500 ரூபாயாகவும் உயர்த்தினோம்.

### எந்த மாநிலமும் செய்ததில்லை


இப்படி நாம் சொல்லிகொண்டே போகலாம். மீனவர்களின் நலனுக்காக தமிழ்நாடு அளவுக்கு எந்த மாநிலமும் இதுவரை இப்படிப்பட்ட காரியங்களை செய்ததில்லை. இதை என்னால் நெஞ்சை நிமிர்த்தி கம்பீரமாக நான் சொல்ல முடியும்! மீனவர்களின் நலனுக்காக இன்னும் செய்ய நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம்.

மீனவர்களின் வாழ்க்கை அல்லல் நிறைந்ததாக இருக்கக் கூடாது. உங்களின் தொழில் பாதுகாப்பானதாக இருக்க வேண்டும்; இந்தத் தொழில் எதிர்காலத்திற்கும் பயனளிக்கும் தொழிலாக இருக்க வேண்டும் என்றுதான் ஏராளமான திட்டங்களை உருவாக்கி இன்றைக்கு செயல்படுத்திகொண்டு இருக்கிறோம்!

கல்வியறிவுதான் எல்லோரும் கரை சேருவதற்கான கலங்கரை விளக்கம்! அதனால்தான், மீனவச் சமுதாயத்தை சேர்ந்த மாணவ, மாணவியர் இந்திய குடிமைப் பணியில் சேர நினைத்தால், அவர்களுக்கு பயிற்சி தர முடிவெடுத்து, இந்த ஆண்டு மட்டும் 39 மீனவ மாணவர்களுக்கு 5 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் பயிற்சி தந்திருக்கிறோம்.

இப்படி பார்த்துப் பார்த்து எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும்; எல்லா சமூக மக்களும் முன்னேற வேண்டும் என்று எல்லோருக்கும் சம அளவில், சம வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம்! திட்டங்களை உருவாக்கித் தருகிறோம்! எனவே, திராவிட மாடல் அரசின் திட்டங்களை மீனவச் சமுதாயத்தின் மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.




# கரும்பு நிலுவைத் தொகை ரூ.97.77 கோடி பெற்ற 5920 விவசாயிகள் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி

சென்னை, மே 28–

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய 5920 விவசாயிகள் பயன்பெறும் வகையில் கரும்பு நிலுவைத் தொகை 97.77 கோடி ரூபாய் உடனடியாக விவசாயிகளுக்கு வழங்க உத்தரவிட்டு, நிலுவைத்தொகை பெற்று பயனடைந்த திருவண்ணாமலை, தர்மபுரி, வேலூர், இராணிப்பேட்டை, நாமக்கல், சேலம், காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 22 தனியார், என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றுள், 2024–25 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் 12 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 16 தனியார் என மொத்தம் 30 சர்க்கரை ஆலைகள் அரவைப் பணி மேற்கொண்டுள்ளன.

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் 2024–25 அரவைப் பருவத்தில் 15.5.2025 வரை 18.81 லட்சம் மெ.டன் அரவை செய்து, 8.40 சதவிகித சர்க்கரை கட்டுமானத்தில் 1.58 இலட்சம் மெ.டன் சர்க்கரை உற்பத்தி செய்துள்ளன.

அரவை மேற்கொண்ட 12 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கள்ளக்குறிச்சி1, கள்ளக்குறிச்சி2, சுப்பிரமணிய சிவா, திருப்பத்தூர் ஆகிய 4 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் அறிஞர் அண்ணா, பெரம்பலூர் ஆகிய 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் தாங்கள் கொள்முதல் செய்து, அரவை செய்த 10.30 லட்சம் மெ.டன் கரும்பிற்கு வழங்க வேண்டிய 329.34 கோடி ரூபாயை தங்கள் ஆலையின் சொந்த நிதியிலிருந்து கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு தொகையை வழங்கி உள்ளன.

மோகனூர், தர்மபுரி, வேலூர், செங்கல்வராயன், திருத்தணி, எம்.ஆர்.கே., செய்யார், மதுராந்தகம் ஆகிய 8 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தாங்கள் கொள்முதல் செய்து, அரவை செய்த 8.51 லட்சம் மெ.டன் கரும்பிற்கு வழங்க வேண்டிய 272.87 கோடி ரூபாயில் 175.10 கோடி ரூபாய் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு தங்கள் சொந்த நிதியிலிருந்து வழங்கியது போக ஆலையின் நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் நிலுவையாக 97.77 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்காமல் வைத்திருந்தன. எனவே, கரும்பு விவசாயிகளின் நலனை பாதுக்காக்கும் விதமாக, தமிழ்நாடு அரசு 5920 விவசாயிகள் பயன்பெறும் வகையில் வழிவகைக் கடனாக 97.77 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இந்த நிதியுதவி கொண்டு விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு சர்க்கரை ஆலைகளால் கரும்பு பணம் நிலுவையின்றி முழுமையாக வழங்கி முடிக்கப்பட்டுவிட்டது.

இந்த நிகழ்வின்போது, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, சர்க்கரைத் துறை ஆணையர் அன்பழகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# திருவொற்றியூரில் புதிய சூரை மீன்பிடி துறைமுகம்: ஸ்டாலின் திறந்து வைத்தார்...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

அறை, வானொலித் தகவல் தொடர்பு மையம், உணவகம், வலை பாதுகாப்பு கூடம், சுகாதார வளாகம், மீனவர் ஓய்வு அறை, இழுவை அறை, படகு பழுது பார்க்கும் இடம், மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி, மழைநீர் வடிகால் கொண்ட சாலை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், மீனவர்கள் ஆழ்கடலில் இருந்து சுகாதாரமான முறையில் தாங்கள் பிடித்து வரும் சூரை மீன்களை தரம் குறையாமல் உடனடியாக ஏற்றுமதியாளர்களுக்கு விற்பனை செய்து, கூடுதல் விலையை பெற்றிட இயலும். இதனால் மீனவர்களின் பொருளாதார நிலை உயர வழிவகுக்கும். இம்மீன்பிடித் துறைமுகம் ஆண்டிற்கு சுமார் 70,000 டன்கள் அளவிற்கு மீன்களை கையாளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

### 12 மீனவ கிராமங்கள் பயன்

இதன் மூலம், இம்மீன்பிடித் துறைமுகத்தினை சுற்றியுள்ள 12 மீனவ கிராமங்களைச் சார்ந்த சுமார் 6,250 மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பு சார்ந்த தொழிலில் உள்ளவர்கள் நேரடியாக பயன் பெறுவர். ராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூர் மீனவ கிராமத்தில் 20 கோடி ரூபாய் செலவில் குளிர்காப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகம்,தூத்துக்குடி மாவட்டத்தில் 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம், திருவள்ளூர் மாவட்டம், சுண்ணாம்புகுளம் மீனவ கிராமத்தில் 8 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்குதளம், விழுப்புரம் மாவட்டம், புதுகுப்பம் மற்றும் அனிச்சங்குப்பம் மீனவ கிராமங்களிலும் முதலியார் குப்பம் மற்றும் செட்டிநகர் மீனவ கிராமங்களிலும் தலா 7 கோடி ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள 2 மீன் இறங்குதளங்கள்;

கடலூர் மாவட்டம், புதுக்குப்பம் மீனவ கிராமத்தில் 8 கோடி ரூபாய் செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்குதளம் உட்பட மொத்தம் 426 கோடியே 13 லட்சம் ரூபாய் செலவிலான 13 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் திறந்து வைத்தார். ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பாக் வளைகுடா பகுதியில் உள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், மொத்தம் 216 கோடியே 57 லட்சம் ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என முதலமைச்சர், கடந்த 7.4.2025 அன்று சட்டமன்றத்தில் அறிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ், சுமார் 60,200 மீனவர் மற்றும் மீனவ மகளிருக்கு பல்வேறு மீன்வளம் சார்ந்த மற்றும் மீன்வளம் சாராத தொழில்கள் தொடங்குவதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு, அவர்கள் அத்தொழிலை தொடங்குவதற்கான நிதியுதவிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு, அத்தொழில் மூலம் அவர்கள் உருவாக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கான உதவிகளும் வழங்கப்படும். அச்சிறப்புத் திட்டத்தினை தொடங்கி வைக்கும் விதமாக முதலமைச்சர் மேற்காணும் மாவட்டங்களைச் சார்ந்த 5 மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு செயல்முறை ஆணைகளை வழங்கினார்.

மீன்பிடி சார்ந்த உபதொழில்களில் ஈடுபட்டு வரும் 50,000 மீனவ மகளிர் பயடையும் வகையில் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம் மகளிர் கூட்டுக் குழுக்களுக்கு நுண்கடன் வழங்கும் “அலைகள்” திட்டம் 2025–26–ம் ஆண்டின் மானிய கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தினை முதலமைச்சர் தொடங்கி வைத்து, சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு கடன் உதவித்தொகைகளை வழங்கினார்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், 16 கடலோர மீனவ கிராமத் திட்டத்தின் கீழ், மீனவ மக்களுக்கு இழுவை இயந்திரம், நடமாடும் மீன் உணவகம், குளிர்பதனப்பெட்டி, புதிய மீன் தீவன ஆலைகள்,

குளிர்காப்பு பெட்டியுடன் கூடிய இரண்டு சக்கர வாகனம் மற்றும் மூன்று சக்கர வாகனம், இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டு மீட்க இயலாத படகுகளின் உரிமையாளர்களுக்கு நிவாரணம், உயிர்காப்பு சட்டை,

தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தின் மூலம் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, இயற்கை மரணத்திற்கான நிவாரணத்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை, விபத்து மரணத்திற்கான உதவித்தொகை;

என மொத்தம் 2,290 பயனாளிகளுக்கு 10 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 30 பயனாளிகளுக்கு முதலமைச்சர் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் கே.பி. சங்கர், எஸ்.சுதர்சனம், ஆர்.டி. சேகர், தாயகம் கவி, துரை சந்திரசேகர், காதர்பாட்சா முத்துராமலிங்கம், எம்.கே.மோகன், ஜோசப் சாமுவேல், எபிநேசர், ஆர். மூர்த்தி, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், மீனவர் நலத்துறை செயலாளர் என். சுப்பையன், மீனவர் நலத்துறை ஆணையர் இரா. கஜலட்சுமி, சென்னை கலெக்டர் ரஷ்மி சித்தார்த், திருவொற்றியூர் மண்டலக் குழு தலைவர் தனியரசு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நீலகிரி, கோவைக்கு மேலும் 2 நாட்களுக்கு ரெட் அலர்ட்

**சென்னை, மே 28–**

**நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு நாளை மற்றும் நாளை மறுநாளும் 2 நாட்களுக்கு அதி கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை (ரெட் அலர்ட்) விடுக்கப்பட்டுள்ளது. கேரளத்தில் தொடங்கியுள்ள தென்மேற்கு பருவமழை தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் பரவியுள்ளது. இதனால் மேற்கு தொடர்ச்சி மலையொட்டியுள்ள மாவட்டங்களில் கனமழை பெய்து வருகின்றது.கோவை மற்றும் நீலகிரி மாவட்டத்திற்கு கடந்த 3 நாட்கள் அதி கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.**

இதனையடுத்து மாவட்ட நிர்வாகம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தது. ஆபத்தான மற்றும் தாழ்வான பகுதிகளில் வசித்த மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

நீலகிரி மாவட்டத்தில் சூறாவளி காற்றுடன் கடந்த 4 நாட்களாக மழை காரணமாக டால்பின் நோஸ், கேத்தரின் நீர் வீழ்ச்சி, தொட்டபெட்டா காட்சிமுனை, பைன் பாரஸ்ட், ஷூட்டிங் ஸ்பாட், பைக்காரா நீர் வீழ்ச்சி உள்ளிட்ட சுற்றுலா தளங்கள் அனைத்தும் மூடப்பட்டன. நேற்று மழையின் தீவிரம் சற்று குறைந்திருந்த நிலையில் இன்று மீண்டும் கன மழை பெய்ய தொடங்கியுள்ளது. இதனால் குந்தா அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான ஒசஹட்டி, பிக்குலி நீரோடைகளில் நீர்வரத்து அதிகரித்தது. அணையின் முழு கொள்ளளவான 89 அடியை எட்டியது.

இந்த நிலையில் நீலகிரி மற்றும் கோவைக்கு நாளையும் நாளை மறுநாளும் (29, 30) சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது சென்னை வானிலை மையம்.

இன்று நீலகிரி, கோவை, தேனி, தென்காசி, திருநெல்வேலி ஆகிய 5 மாவட்டங்களில் மிக கனமழை பெய்யும் எனவும் கன்னியாகுமரி, திருப்பூர், திண்டுக்கல் மாவட்டங்களில் கனமழை பெய்யும் எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நாளையும், நாளை மறுநாளும் தேனி, தென்காசி, திருநெல்வேலி, குமரி மாவட்டங்களில் மிக கனமழையும் திருப்பூர், திண்டுக்கல் மாவட்டங்களில் கனமழையும் பெய்யும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:–

சின்னகலார் – 15 செ.மீ., அவிலாஞ்சி – 14 செ.மீ., சாம்ராஜ் எஸ்டேட், மேல் பவானி, நாலுமுக்கு தலா 13 செ.மீ., ஊத்து, கக்காச்சி தலா 12 செ.மீ., சோலயார் – 11 செ.மீ., மாஞ்சோலை, குண்டா பாலம் – 10 செ.மீ., பாபநாசம் – 8 செ.மீ., பெரியார், சேர்வலாறு அணை, சிறுவாணி ஆதிவரம், நடுவட்டம், கிளென்மோர்கன், மக்கினம்பட்டி தலா 7 செ.மீ., வால்பாறை, எமரால்டு, பொள்ளாச்சி, வால்பாறை தாலுக்கா அலுவலகம், தேவலா, மேல் கூடலூர் தலா 6 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

# தி.மு.க.வை வீழ்த்த த.வெ.க. உள்பட அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்: நயினார் நாகேந்திரன் பேட்டி

**மதுரை, மே 28–**

**தி.மு.க.,வை வீழ்த்த த.வெ.க., உட்பட அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என நயினார் நாகேந்திரன் கூறினார்.**

தமிழகம் முழுவதும் உள்ள அறுபடை வீடுகள் உள்ளிட்ட முருகன் கோவில்களை சீரமைக்க வலியுறுத்தியும், முருக பக்தர்களை ஒன்று திரட்டவும், மதுரையில் 'குன்றம் காக்க... கோவிலை காக்க' என்ற பெயரில் முருக பக்தர்கள் மாநாடு ஹிந்து முன்னணி சார்பில் ஜூன் 22–ந் தேதி நடைபெறுகிறது. அதற்கான அடிக்கல் பூமி பூஜை மதுரை வண்டியூரில் இன்று நடந்தது. தொடக்கத்தில் கோ பூஜை நடந்தது. விழாவில் அமைக்கப்பட்ட மாநாடு கட்டமைப்பின் மாதிரியை பா.ஜ.க, மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், மூத்த தலைவர்கள் பொன் ராதாகிருஷ்ணன், கேசவ விநாயகம் பார்வையிட்டு கேட்டறிந்தனர்.

பின்னர் 6:58 மணிக்கு தொடங்கிய பூமி பூஜையில் முகூர்த்தக்கால் நாட்டப்பட்டது.

பின்னர் நயினார் நாகேந்திரன் நிருபர்களிடம் கூறியதாவது:

தி.மு.க.,வை வீழ்த்த த.வெ.க., உட்பட அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். விஜய் இணைய வேண்டும் என்று கடம்பூர் ராஜூ கூறிய கருத்தை வரவேற்கிறேன். தமிழ் கடவுள் முருகனுக்கு நடைபெறும் மாநாட்டில் ஒரு வாரம் முன்பு அறுபடை வீடுகளின் மாதிரி அமைக்கப்பட உள்ளது. ஏற்கனவே அரசு ஒரு மாநாடு நடத்தியது. ஆனால் இந்த மாநாடு முழுமையான பக்தி உள்ள மாநாடாக அமையும். மலேசியா, சிங்கப்பூரில் இருந்து பக்தர்கள் வருவர். இது முழுக்க முழுக்க பக்தி மாநாடு. இதில் அரசியல் கிடையாது. பக்தர்களுக்காக நடத்தப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆபரேஷன் சிந்தூர் லோகோ: வடிவமைப்பாளர் விவரத்தை வெளியிட்டது இந்திய ராணுவம்

புதுடெல்லி, மே 28–

'ஆபரேஷன் சிந்தூர்' லோகோவை வடிவமைத்தது யார் என்ற விவரத்தை இந்திய ராணுவம் தற்போது வெளியிட்டுள்ளது.

இந்திய ராணுவத்தால் வடிவமைக்கப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் லோகோ, பஹல்காம் படுகொலைகளுக்கு பதிலடியாக இந்தியாவின் துல்லியமான தாக்குதல்களுக்கு அடையாளமாக மாறியுள்ளது.

கடந்த 7–ந்தேதி அன்று பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள 9 பயங்கரவாத முகாம்களுக்கு எதிராக இந்தியா நடத்திய துல்லியமான தாக்குதல்களுக்குப் பிறகு வெளியிடப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் லோகோ, கோடிக்கணக்கான மக்களிடையே பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் உறுதியை பிரதிபலிக்கிறது.

ஆபரேஷன் ‘சிந்தூர்’ லோகோவை வடிவமைத்தது லெப்டினன்ட் கர்னல் ஹர்ஷ் குப்தா மற்றும் ஹவில்தார் சுரீந்தர் சிங் என்று இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

சிந்தூரில் உள்ள இரண்டாவது 'ஓ' ஒரு பாரம்பரிய குங்குமப்பூ கிண்ணத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது திருமணமான இந்து பெண்களின் புனித சின்னம் அதன் அடர் சிவப்பு நிறம் தியாகம், நீதி மற்றும் தேசிய பெருமை பற்றி நிறைய பேசுகிறது. இந்த சின்னம் கூடுதல் தொடர்பு இயக்குநரகத்தின் சமூக ஊடகப் பிரிவால் உள்நாட்டில் உருவாக்கப்பட்டது என்றும் ராணுவம் தெரிவித்துள்ளது.


## ஈசாப் இந்தியா லிமிடெட்

ESAB®

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.

தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

**மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

ரூ. லட்சங்களில் (EPS தவிர)

| வ.எண் | விவரங்கள் | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த ஆண்டு | |
|---|---|---|---|---|---|---|
| | | மார்ச் 31 2025 (தணிக்கை செய்யப்படாதது) | டிசம்பர் 31 2024 (தணிக்கை செய்யப்படாதது) | மார்ச் 31 2024 (தணிக்கை செய்யப்படாதது) | மார்ச் 31 2025 (தணிக்கை செய்யப்படாதது) | மார்ச் 31 2024 (தணிக்கை செய்யப்படாதது) |
| 1 | மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம் | 36,977 | 34,075 | 34,226 | 138,125 | 124,981 |
| 2. | இக்காலத்திற்கான நிகர லாபம் (வரிக்கு முன், சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்) | 6,253 | 5,452 | 5,992 | 23,572 | 21,996 |
| 3 | இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின் ) | 6,253 | 5,452 | 5,992 | 23,572 | 21,996 |
| 4 | இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின் ) | 4,743 | 4,038 | 4,425 | 17,542 | 16,298 |
| 5 | இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)] | 4,725 | 4,038 | 4,405 | 17,524 | 16,278 |
| 6 | சமபங்கு மூலதனம் | 1,539 | 1,539 | 1,539 | 1,539 | 1,539 |
| 7 | பிற பங்கு | - | - | - | 34,586 | 29,067 |
| 8 | பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | | |
| | அ) அடிப்படை | 30.82 | 26.24 | 28.75 | 113.98 | 105.90 |
| | ஆ) குறைமதிப்பு | 30.82 | 26.24 | 28.75 | 113.98 | 105.90 |

**குறிப்பு** : மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மார்ச் **31, 2025** -ன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு மற்றும் ஆண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.esabindia.com என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் BSE Limited மற்றும் NSE India Limited என்ற இணையதளத்திலும் காணலாம்.

சென்னை
மே **28, 2025**

“Shaping the world we imagine”
Visit our website : https://www.esabindia.com

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக
**ரோஹித் கம்பீர்**
மேலாண்மை இயக்குனர்